# வளைகுடா நாடுகளில் பள்ளிக் கலைத்திட்டமும் வடிவமைப்பும்

அ. ரெங்கநாயகி
முனைவர் பட்ட ஆய்வாளர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். கைப்பேசி
மின்னஞ்சல் : kayaltamil2009@gmail.com

## முன்னுரை

கலைத்திட்டம் என்பது ஒரு நிரந்தரமான கூறன்று. அது ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு பள்ளிக்கும் மாறும் தன்மை கொண்டது. ஏனெனில், அப்போதுதான் நாட்டின் முன்னேற்றமும் பள்ளியின் முன்னேற்றமும் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அமையும். பள்ளிக் கலைத்திட்டத்தில் தமிழ்ப்பாடம் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. அதிலும், குறிப்பாக வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்கள் பன்மொழிப் புலமை மிக்கவராதலால் தங்களது குழந்தைகளின் அறிவு, மனநிலை, பகுத்தறியும் திறன், பிரச்சனைகளை எதிர் கொள்ளும் திறன் ஆகிய குணநலன்களை வளர்ப்பதுடனும் தற்கால வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ற முறையில் தயார்படுத்துதலுடனும் தமிழ்ப்பாடம் அமையுமாறு பள்ளிக் கலைத்திட்டமும் வடிவமைப்பும் அமைக்கப்பட்டிருப்பதனை விளக்கும் ஆய்வுக் கட்டுரையாக இது விளங்குகிறது.

## குறிச்சொற்கள்

கலைத்திட்டம், பள்ளிப் பாடங்கள், ஒருங்கிணைப்பு, தமிழ்ப்பாடம், வளைகுடா நாடுகள், வடிவமைப்புகள்.

## கலைத்திட்டம் விளக்கம்

கல்வியின் குறிக்கோள்களை அடைவதற்காகப் பள்ளி மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான கற்றல் செயல்பாடுகள் கலைத்திட்டமாகும். மேலும், பள்ளியில் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைமுறைப்படுத்தப்படும் எல்லாவிதமான செயற்பாடுகளும் கலைத்திட்டம் என்று அழைக்கப்படும். “கலைத்திட்டம் என்பது கல்வியின் உள்ளடக்கம், கற்கை நெறி அமைப்பு, கல்வி அனுபவங்களின் வடிவம், கற்க வேண்டிய பாடங்களின் தொகுதி, பாடப்பொருள், கல்விசார் தொழிற்பாடுகள்”1 என்று நீண்ட விளக்கம் தருகிறார் கலாநிதி சபா ஜெயராசா. மேலும், கலைத்திட்டம் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி அவர் கூறும் கருத்து மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

**பள்ளிக் கலைத்திட்டம் உருவாக்கப்படுவதன் அவசியம்**

- மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய....
- சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய....
- சமகாலப் பிரச்சனைகளைச் சரி செய்ய...
- எதிர்காலத் தேவைகளை நிறைவேற்ற...
- நாட்டு நலனைக் கருத்தில் கொள்ள...
- கலாச்சாரத் தேவைகளை நிறைவேற்ற....
- மாணவர்களின் உளவியல் தேவைகளை நிறைவேற்ற....

**பள்ளிக் கலைத்திட்டம்**

கலைத்திட்டத்தில் அறிவு எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது என்பது ஆராய்ச்சியின் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றது. இதனால் கல்விச் சமூகவியல் பற்றிய கண்ணோட்டத்தைத் தவிர்த்துக் கலைத்திட்டத்தை வடிவமைக்க இயலாது. "வரன்முறையான (Formal) கல்விச் செயற்பாடு கலைத்திட்டமின்றி முன்னெடுத்துச் சொல்லப்பட முடியாது. காலத்தையும், கால இடைவெளிக்குள்ளே கற்க வேண்டிய அறிவையும் அனுபவங்களையும் கலைத்திட்டம் ஒன்றிணைத்து நிற்கின்றது"[2] என்கிறார் கலாநிதி சபா ஜெயராசா. மேலும், அவர் கலைத்திட்ட வடிவமைப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்துகின்றார்.

- பாடக் கலைத்திட்டம்
- செயன்முறைக் கலைத்திட்டம்
- ஒன்றிணைந்த கலைத்திட்டம்
- உள்ளீட்டுக் கலைத்திட்டம்
- பரந்த துறைக் கலைத்திட்டம்
- ஓடுபாதைக் கலைத்திட்டம்
- வகுப்புப்படி நிலைக் குறிக்காத கலைத்திட்டம்
- இருவழி முன்னேற்றக் கலைத்திட்டம்
- சுழல் ஏணிக் கலைத்திட்டம்.

பள்ளியும் கலைத்திட்டமும் பற்றி ஆராய்ந்த ஐ. டேவிஸ் என்பவர் நான்கு வகையான கருத்தியல்களை முன்வைப்பதைக் காணலாம்.

- பழைமைக் கருத்தியல்
- மீளாய்வுக் கருத்தியல்
- உளக்கவர்ச்சிக் கருத்தியல்
- மக்களாட்சிக் கருத்தியல்

கலைத்திட்டம் திட்டமிட்ட கற்றல் அனுபவங்களின் ஒரு தொடராகும். ஆகவே, திட்டமிட்ட கலைத்திட்டம் மூலம் அதைச் செயல்படுத்தத் திட்டமிடல் வேண்டும். பின்னர், அதன் மூலம் அடைந்த கலைத்திட்டம்

என்னவென்பதை நாம் மதிப்பிடுதல் வேண்டும். அப்போதுதான் அதன் வளர்ச்சி மேம்படும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

**<u>பள்ளிக் கலைத்திட்டத்தின் வகைகள்</u>**

1. பாடக் கலைத்திட்டம்
2. மையக் கலைத்திட்டம்
3. சிறப்புக் கலைத்திட்டம்
4. ஒருங்கிணைந்த கலைத்திட்டம்
5. செய்ம்முறைக் கலைத்திட்டம்
6. இணைக் கலைத்திட்டம்
7. மறைக் கலைத்திட்டம்

### 1. பாடக் கலைத்திட்டம்

பல்வேறு வகையான பாடங்களைக் கற்றல் கற்பித்தல் முறையிலும் மதிப்பீட்டு முறையிலும் வகைப்படுத்துதல். இக்கலைத்திட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்குரிய திட்ட வரைவு, காலம், எடுத்துக் கொள்ளும் உத்திகள், துணைக் கருவிகள் எனப் பல்வேறு அடிப்படையில் அமைவது பாடக் கலைத்திட்டம் ஆகும்.

### 2. மையக் கலைத்திட்டம்

ஒரு குறிப்பிட்ட நோக்கத்தினை அடைவதற்காக ஆசிரியர், மாணவர் பின்பற்றக்கூடிய பாடத்திட்டத்தினை உடையதே மையக் கலைத்திட்டமாகும். இதில் குறிக்கோளானது முன்னுரிமை பெற்றதாகவும் காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமலும் இருக்கும்.

### 3. சிறப்புக் கலைத்திட்டம்

ஒரு குறிப்பிட்ட கற்றல் முறைமை, பாடப்பகுதி தொடர்பான ஒன்றில் மட்டும் கவனம் செலுத்துவதே சிறப்புக் கலைத்திட்டமாகும்.

### 4. ஒருங்கிணைந்த கலைத்திட்டம்

பாடப்பிரிவுகளாகப் பிரிக்கப்படாமல் எல்லாக் கருத்துக்களையும் ஒன்றிணைத்துக் கற்பிப்பது. ஒவ்வொரு செயற்பாடுகள் இயல்களாகப் பகுக்கப்பட்டு அதிகக் கவனம் செலுத்துதல். மாணவர்களின் கூர்த்த அறிவு, திறன், மனப்பான்மை போன்றவற்றில் அதிகக் கவனம் செலுத்துதல். பல்துறை அனுபவம் பெற்ற ஆசிரியர்களின் பங்களிப்புகளும் குழுச் செயல்பாடுகளும் ஆசிரியர், மாணவர் கற்றல் தொடர்பும் ஒருங்கிணைக்கப் படுதல்.

5. **செய்ம்முறைக் கலைத்திட்டம்**

மாணவர்களைக் குழுக்களாகச் செயற்படுத்துதல். மாணவர்களை மையப்படுத்திப் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளல். செயல்பாடுகளுக்குத் தகுந்தாற் போன்று வகுப்பறைகளை ஒழுங்குபடுத்துதல்.

6. **இணைக் கலைத்திட்டம்**

பள்ளிப் பாடக்கலைத்திட்டத்திற்கு இணையாக அதே வேளையில் நுண்ணிலை முறையில் மாணவர்களிடம் கற்றல் தேர்ச்சி செயற்பாடுகளை உள்ளடக்கியது இணைக் கலைத்திட்டம் ஆகும்.

7. **மறைக்கலைத் திட்டம்**

தற்போது பள்ளியில் படிக்கும் மாணவர்களிடமும் முன்னாள் மாணவர்களிடமும் பள்ளி சார்ந்த விழுமியங்களைக் கேட்டறிதல். இதை மறைக் கலைத்திட்ட வகையில் அடக்குவர்.

**<u>பள்ளிக் கலைத்திட்டத்தால் ஏற்படும் நன்மைகள்</u>**

- தமிழைக் கற்பிக்கும் முறையான அறிவினைப் பெறுதல்.
- கல்வித்திறன்களைக் கற்பிக்கும் முறையினை அறிதல்.
- கற்றல் இலக்கினை அறிதல்.
- உயர்கல்வி அளவில் உள்ள கருத்துகளையும் திறன்களையும் இனங்காணும் திறனை வளர்த்தல்.
- கல்வி நுட்பவியல் சார்ந்த கருவிகளான தொலைக்காட்சி, வானொலி, கணிப்பொறி, செயற்கை நுண்ணறிவு போன்றவைகளைக் கற்றல், கற்பித்தல் செயலில் பயன்படுத்தப்படும் அறிவினைப் பெறுதல்.
- தமிழ்க் கற்பித்தலுக்குத் துணை புரியும் துணைக் கருவிகளைத் தயாரிக்கும் முறையினை அறிதல்.
- பள்ளிப் பட்டறைகளை எவ்வாறு நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளை அறிதல்.
- பல்வேறு வகையான மதிப்பீட்டு உத்திகளை அறிதல்.
- மாணவர்களின் அடைவுத் தேர்வுகளை நடைமுறைப்படுத்தி, அதனால் கிடைக்கும் முடிவுகளை எவ்வாறு அலசி ஆய்தல் என்பதை அறிதல்.
- மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளில் உள்ள குறையறித் தேர்வுகளை நடத்துதல் மற்றும் அதற்கான முறைகளை அறிதல்.

**<u>பள்ளிப் பாடங்கள் திட்டமிடுவதால் உண்டாகும் நன்மைகள்</u>**

“குழந்தைப் பருவத்திலே பதிய வைக்கப்படும் எண்ணங்களும் நடத்தைகளும் ஆழ்ந்து நிலை நின்று நீடிக்கக் கூடியவை. அவை பிற்காலத்தில் முன் வைக்கப்படும் எதிர் கருத்துகளுக்கு முகம் கொடுத்து மறுதலிக்கக்கூடிய

உறுதி கொண்டவையாக இருப்பதால் குழந்தைப் பருவத்து அறநெறி விருத்தியில் ஆழ்ந்த கவனம் செலுத்துதல் வேண்டும்"3 என்கிறார் கலாநிதி சபா ஜெயராசா. அவ்வாறு செய்வதால் உண்டாகும் நன்மைகளைக் காணலாம்.

- கற்றல் வேகம் அடையும்.
- மாணவர்களை ஊக்குவித்து அதிகக் கவனத்துடனும் ஆர்வத்துடனும் கற்க வழி வகை செய்யலாம்.
- மிகவும் சிக்கனமாக நேரத்தைச் செலவிடலாம்.
- துணைக் கருவிகள் உருவாக்கி மாணவர்களின் புரிதல் திறனை அதிகப்படுத்தலாம்.
- ஆசிரியர் மாணவர் தொடர்பு மேம்படும்.
- வாசிப்புத் திறன் மேம்படும்.
- மிகவும் சிக்கலான கருத்துகளைக் கூட விளங்கிக் கொள்ள வழி வகுக்கும்.
- வாழ்க்கை அனுபவங்களைக் கற்றுத் தர இயலும்.
- செய்து காட்டல், காட்சிப்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் மூலம் கற்றல் திறமடையும்.

## கலைத்திட்டத்தில் இன்றியமையாத வகைகள்

1. பாட மையக் கலைத்திட்டம்
2. ஆசிரியர் மையக் கலைத்திட்டம்
3. மாணவர் மையக் கலைத்திட்டம்

## கலைத்திட்டத்தின் கூறுகள்

1. கல்வி நோக்கங்கள்
2. இலக்குகள்
3. குறிக்கோள்கள்
4. கற்றல் கற்பித்தல் முறைகள்
5. தேர்வுகள், மதிப்பீடுகள்
6. கல்வித் தொழில்நுட்பம்
7. கற்றல் வளமைகள்

## கலைத்திட்டத்தின் வாயிலாக ஆசிரியர் பெறக்கூடிய நன்மைகள்

- கல்வி நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைதல்.
- சமூகப் பொருளாதாரக் கல்விச் சீர்திருத்தங்களை நாட்டின் நலனுக்காக அடைய வழிவகை செய்தல்.
- கற்றல் கற்பித்தலில் மிகவும் இன்றியமையாத கூறு என்பதை அறிதல்.

- முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஈடுபடுதல்.

## கலைத்திட்ட வடிவமைப்பில் ஆசிரியரின் பங்கு

கலைத்திட்ட வடிவமைப்பில் ஆசிரியர் பங்கு மிகவும் இன்றியமையாதது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதை நன்முறையில் மாணவர்களுக்குக் கொண்டு சேர்ப்பவர். கற்றல் கற்பித்தல் நோக்கங்களை உருவாக்குவதில் இருந்து அவற்றை மதிப்பீடு செய்தல் மற்றும் பராமரித்தல் போன்ற செயல்களைச் செய்பவர். கலைத்திட்டத்திற்குத் தேவையான மூலங்களை வடிவமைத்தலிலும் முன்நின்று நிற்பவர். கல்விச் சூழலுக்கேற்ற தேவையான வடிவமைப்புக் கூறுகளை மாணவர்களின் நலன் சார்ந்தும் அவர்களின் நுண்ணறிவுத் திறன் சார்ந்தும் வடிவமைப்பவர்.

இவ்வாறு எதிர்காலத் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் கலைத்திட்டம் வளைகுடா நாடுகளில் உள்ள பள்ளிகளில் வடிவமைக்கப்படுகின்றன. இதனால் உலக அளவில் தொழில்நுட்பங்களை எதிர்கொள்ளத் தேவையான அறிவு விருத்திக்குப் பயன்படுகின்றன. மேலும், 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை மையமாகக் கொண்டு பிற திறன்களான மின் திறன்கள், வாழ்க்கைத் திறன்கள், தொழில் வாய்ப்புத் திறன்கள், மனிதர்களுக்கிடையேயான திறன்கள், புலன் உணர்வு சார்ந்த திறன்கள் ஆகியனவும் கலைத்திட்டத்தில் ஆராயப்பட்டுள்ளன.

## முடிவுரை

சமூக நிலைமைக்கும் வாழ்க்கை இயல்புகளுக்கும் ஏற்றவாறு ஒவ்வொரு பள்ளியிலும் கலைத்திட்டம் வேறுபடும். வளைகுடா நாடுகளில் நன்றாகத் திட்டமிட்டுச் சமூகம் மற்றும் வாழ்க்கைக் கருத்தியலுக்கு மதிப்பளித்துக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படுவதை இலக்காகக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது. மேலும், ஒவ்வொரு வகையான கலைத்திட்டக் கூறுகளும் எதிர்காலச் சமுதாயத்தை மிக நன்முறையில் கட்டி எழுப்பும் என்பதை அறிய முடிகின்றது. மேலும், பள்ளிப் பாடங்கள் பாடச் செயல்பாடுகளுக்கும் பாடப் புறச்செயல்களுக்கும் இடையில் இருக்கின்ற வேற்றுமையை நீக்கி குழந்தைகளின் முழு வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு அனுபவங்களைக் கலைத்திட்டம் அளிப்பதைக் காண முடிந்தது. வளைகுடா நாடுகளில் உள்ள மாணவர்களின் கல்விச் செயல்பாடுகளைப் பள்ளி வழியாக முழுமையான நோக்கங்களைப் பெறச் செய்யும் வழிவகைகளைக் கலைத்திட்டம் கொண்டிருப்பதை விளங்க முடிந்தது.

## சான்றெண் விளக்கம்

1. கலாநிதி சபா ஜெயராசா, பாடசாலையும் கலைத்திட்டமும், ப. 19
2. கலாநிதி சபா ஜெயராசா, கலைத்திட்டம், ப. 32
3. கலாநிதி சபா ஜெயராசா, பாடசாலையும் கலைத்திட்டமும், ப. 57

## துணைநூற்பட்டியல்

1. ஈசுவரமூர்த்தி, வ., கல்வி ஒரு மதிப்பீடு, சிந்தனைப் பதிப்பகம், சென்னை, 1966.
2. பரசுராமன், த., தமிழ் கற்பித்தலில் பயிற்சிகள், அரசு பதிப்பகம், மதுரை, 2011.
3. பழனிவேலு, முனைவர் ஞா., செந்தமிழ் கற்பித்தல் - பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ் தஞ்சாவூர், 2011.
4. ஜெயராசா, கலாநிதி சபா., கலைத்திட்டம், அகவிழி வெளியீடு, கொழும்பு, 2007.
5. ஜெயராசா, கலாநிதி சபா., பாடசாலையும் கலைத்திட்டமும், ஸ்ரீசாயி அச்சகம், இணுவில், 1995.